# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.58/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணிய ராஜு | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பராஜு | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : பீரக்குப்பம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**25.11.2024**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

3. பட்டா எண்.1ல் ஸ்ரீராமலு அவர்களின் ஸ்ரீபஜனை கோவில் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1423ம் பசலிக்கான சாகுபடி அடங்கல் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **(சாகுபடி அடங்கல் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 19.04.2014ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் சான்று தாக்கல் செய்கிறேன். **(கிராம நிர்வாக அலுவலர் சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நானும் கிராம பொது மக்களும் திருத்தணி காவல் ஆய்வாளருக்கு கொடுத்த புகார் மனு நகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)